வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தனியாக சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

பேருந்துப் பணிமனை

***28762—திரு. எஸ். அம்பேத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, பெரணமல்லூர் பேரூராட்சியில் புதிய பேருந்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, பெரணமல்லூரைச் சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்தும் ஆரணி, செய்யாறு, வந்தவாசி மற்றும் சேத்துப்பட்டு ஆகிய பணிமனைகளில் இருந்து இயக்கப்படும் நகர மற்றும் புறநகரப் பேருந்துகள்மூலம் பகுதி வாரியாகப் பேருந்து வசதி பெற்றுள்ளன. எனவே, பெரணமல்லூரில் பணிமனை அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமெங்கும் வாழும் தமிழ் மக்களின் ஒப்பற்றத் தலைவர்

2018 மார்ச் 19]

அவர்களை வணங்குகிறேன். வருங்காலத் தமிழகம் எங்கள் செயல் தலைவர், போற்றுதலுக்குரிய அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு வரை பெரணமல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு சட்டமன்றத் தொகுதி இயங்கி வந்தது. பிறகு தொகுதி மறு சீரமைப்பிற்குப் பிறகு 40 சதவிகித மக்கள்தொகை கொண்ட பரப்பளவு போளூர் சட்டமன்றத் தொகுதியிலும், மீதமுள்ள 60 சதவிகித மக்கள்தொகை கொண்ட பரப்பளவு வந்தவாசி சட்டமன்றத் தொகுதியிலும் இணைக்கப்பட்டது. பெரணமல்லூர் பேரூராட்சியில் 12 வார்டுகள், 58 ஊராட்சிகள் என மொத்தம் சுமார் 80,000 மக்கள்தொகை கொண்ட பரப்பளவில் போக்குவரத்து என்பது மிகவும் அவசியமான ஒன்றாகவே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போன்று செய்யாறிலிருந்து, வந்தவாசியிலிருந்து வரும் பேருந்துகள் அனைத்தும் சாலைகள் ஓரமாக நிறுத்தப்படுவதால் அங்குள்ள மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே, மக்கள் வசதிக்காக அங்கு ஒரு பணிமனை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி, பெரணமல்லூரிலிருந்து சேத்துப்பட்டு பணிமனை 20 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அந்தப் பணிமனையில் வெறும் 24 பேருந்துகள் மட்டுமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, செய்யாறு பணிமனை 25 கிலோ மீட்டரிலே உள்ளது. 68 பேருந்துகள் உள்ளன. வந்தவாசியிலுள்ள இரண்டு பணிமனைகளில், முதல் பணிமனையிலே 43 பேருந்துகளும், இரண்டாவது பணிமனையிலே 47 பேருந்துகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஆரணி பணிமனை 24 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ளது. அதைச் சுற்றி இருக்கக்கூடிய பணிமனைகள் எல்லாம் வரையறுக்கப்பட்டுள்ள தூரங்களிலே அமைந்துள்ள காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பெரணமல்லூரில் தற்போது பணிமனையை அமைக்கக்கூடிய அவசியம் எழவில்லை. இருந்தபோதிலும், அதை*

ஆய்வு செய்து, தேவை இருக்குமாயின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. எஸ். அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் பேரூராட்சி ஒரு தாலுகா தலைமையிடமாக இருக்கக்கூடிய அளவுக்கு மக்கள்தொகை நிறைந்த பேரூராட்சி. அதுமட்டுமல்லாமல், பெரணமல்லூர் பேரூராட்சி, ஒரு நகராட்சியாக உயர்த்தக்கூடிய அளவுக்கு மக்கள்தொகை கொண்ட பேரூராட்சி. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் அதிக அளவு பேருந்தில் பயணம் செய்யக்கூடியவர்களாக உள்ளனர். சில நேரங்களில் பேருந்துகளில் ஏதாவது பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது மாற்றுப் பகுதியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல் ஆரணியிலிருந்தும், செய்யாறிலிருந்தும், வந்தவாசிக்கு வருவதற்குக் காலதாமதம் ஏற்படுவதால், மக்களின் வசதிக்காக உடனடியாக அங்கு ஒரு பணிமனையும், பேருந்து வசதியும் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:**ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. தகவல் கோரல்

(அ) காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவினை விரைவில் அமைத்திட மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் சொன்னதைத்தான் நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொன்னதைத்தான் நான் படிக்கிறேன். (குறுக்கீடு) வேறு சப்ஜெக்ட்டா? குரங்கணி தீ விபத்து குறித்து*